## வினாக்களுக்கு விடையளி

1. கண்ணன் எங்குப் புறப்பட்டான்?

2. பள்ளி செல்லும் வழியில் கண்ணன் யாரைப் பார்த்தான்?

3. பேருந்து எதில் மோதியது?

4. பெரியவர் எந்த எண்ணிற்குச் செல்பேசியில் பேசினார்?

5. ஆசிரியர் கண்ணனை எதற்காகப் பாராட்டினார்?

## உன்னை அறிந்துகொள்

நீ உன் வீட்டில் யாருக்கு என்ன உதவிகளைச் செய்கிறாய்? வகுப்பறையில் கலந்துரையாடு.

## சொல் விளையாட்டு

வாத்தில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

எ. கா: நகை

1.


2.


3.


4.

5.

6.





**சிந்திக்கலாமா?**

அகில் பள்ளியில் படிக்கும் சிறுவன். அவனுக்கு உயிர்களிடத்தில் அன்பு காட்டுவதும். பிறருக்கு உதவி செய்வதும் பிடிக்கும். ஆனால் அவன் பெற்றோர்கள், அகில் சிறுவன் என்பதால், அவனுக்கு ஆபத்து ஏதேனும் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுகின்றனர்.


அவர்களின் பயம் சரியானதா?
இல்லையா? ஏன்?

# 3 தனித்திறமை

காட்டின் ராஜாவான சிங்கம் சில நாள்கள் வெளியூர் சென்றபோது புலிக்குத் தனது பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றது. புலியும் சில நாள்கள் ராஜாவாகப் பதவி ஏற்று கொண்டது. படைத்தளபதியாகச் சிங்கக் குட்டி பொறுப்பேற்றது.












கழுதையாரே ...... உமக்கு உரிய ...... பதவி


ராஜாவே..! ராஜாவே..! இந்தக் கழுதை ஒரு முட்டாள். கழுதையால் எந்த ஒரு பயனும் இல்லை.


அப்படியா...!


இதே போல் முயல், ஆமை இரண்டும் எதற்கும் பயன்படாது.




பண்புகளை வளர்த்தல்

**நீதிக் கருத்து:**

**ஒவ்வொருவருக்கும் தனித்திறமை உண்டு. அதை அறிந்து சூழ்நிலைக்கு ஏற்பப் பயன்படுத்த வேண்டும்.**

## வாங்க பேசலாம்

காட்டின் அரசனாக சிங்கமே இருக்க வேண்டுமா?
புலி காட்டுக்கு அரசனாக இருப்பது குறித்து உனது கருத்து என்ன?
வகுப்பறையில் விவாதிக்க...

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தகுதி இச்்சொல் உணர்த்தும் பொருள் ........................................

   (அ) தரம் (ஆ) மரம்
   (இ) கரம் (ஈ) வரம்

2. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ........................................

   (அ) நண்பர்கள் (ஆ) எதிரிகள்
   (இ) அயலவர்கள் (ஈ) சகோதரர்கள்

3. பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

   (அ) வாழை (ஆ) வேளை
   (இ) வேலை (ஈ) வாளை

4. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................

   (அ) படைத் + தளபதி (ஆ) படை + தளபதி
   (இ) படையின் + தளபதி (ஈ) படைத்த + தளபதி

5. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........................................

   (அ) எதைபார்த்தாலும் (ஆ) எதபார்த்தாலும்
   (இ) எதைப்பார்த்தாலும் (ஈ) எதைபார்தாலும்

## வினாக்களுக்கு விடையளி

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?

2. புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?

3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?

4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?


5. இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

பதுங்கிச் செல்வேன். பாய்ந்து இரையைப் பிடிப்பேன், நான் யார்?



இரவில் விழித்தும் பகலில் தூங்கியும் வாழ்வேன், என் கண்களை எல்லாத்திசையிலும் திருப்புவேன், நான் யார்?



என் காதுகள் நீண்டிருக்கும் வேகமாக ஓடுவேன், கேரட் எனக்கு மிகவும் பிடிக்கும், நான் யார்?



## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக


1. காட்டில் விலங்குகள் நடந்தது கூட்டம்

2. இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே

3. முயல் ஓடும் வேகமாக அதி

4. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக

## எந்த விலங்கிற்கு, எந்தப் பணி?

| விலங்குகள் | | பணிகள் |
|---|---|---|
| 1.  | – | பொருள்களைச் சேகரிக்கும் வேலை |
| 2.  | – | எச்சரிக்கைப் பணி |
| 3.  | – | படைத்தளபதி |
| 4.  | – | இரவுக்காவல் |
| 5.  | – | சமையல் வேலை |

## பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குழலி பாடம் படித்தாள். | ________ | ________ |
| | | ________ | |
| 2. | அமுதன் பந்து விளையாடினான். | ________ | ________ |
| | | ________ | |
| 3. | மரம் செழித்து வளர்ந்தது. | ________ | ________ |
| | | | ________ |

## மொழியோடு விளையாடு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவேண்டும் . முதல் குழுவினருக்கு விலங்குகள் மற்றும் பறவைகளின் பெயர் எழுதப்பட்ட அட்டையினை ஒவ்வொரு மாணவனுக்கும் ஒன்று வீதம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் ஒலிப்பான் மூலம் ஒலி எழுப்பியவுடன் முதல் குழுவில் இருந்து ஒரு மாணவன் தனது அட்டையில் எழுதப்பட்டு உள்ள விலங்கு (அ) பறவை போல நடித்து (அ) ஒலி எழுப்பிக் காட்ட வேண்டும். நடிக்கும் விதத்தை (அ) ஒலியைக் கேட்டு அது என்ன விலங்கு? (அ) பறவை? என்பதனை இரண்டாவது குழுவினர் கண்டறிந்து கூறவேண்டும். இவ்வாறே அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.



# எழுத்துகளின் வகைகள் அறிவோமா?

DTWXXP


குழந்தைகளே! நமக்கெல்லாம் பெயர் இருக்கிறது அல்லவா...

அதுபோல எழுத்துகளுக்கும் பெயர் வைக்கலாமா..

தமிழில் உள்ள உயிரெழுத்துகள் மொத்தம் – 12

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

இதில்







இவற்றை ஒலித்துப் பாருங்கள்

இந்த ஐந்து எழுத்துகளும் ஓசையில் குறுகி ஒலிக்கின்றன எனவே இவற்றிற்குக் குறில் அல்லது குற்றெழுத்துகள் என்று பெயரிடுவோம்.



இவற்றை ஒலித்துப் பாருங்கள்




இந்த ஏழு எழுத்துகளும் ஓசையில் நீண்டு ஒலிக்கின்றன இவற்றிற்கு நெடில் அல்லது நெட்டெழுத்துகள் என்று பெயரிடுவோம்..


இப்பொழுது மெய்யெழுத்துகளுக்குப் பெயரிடுவோமா...

தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் மொத்தம் – 18.

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

இவை ஒலிக்கும் தன்மையை வைத்து மூன்று வகைகளாகப் பிரித்துப் பெயரிடுவோம்.


## வல்லினம்






யானைகள் எப்படி வலிமையாக இருக்கின்றனவோ அப்படியே க், ச், ட், த், ப், ற் – என்ற எழுத்துகளும் வலிய ஓசை உடையவை, எனவே இவற்றுக்கு வல்லினம் என்று பெயரிடுவோம்.

## மெல்லினம்







முயல்கள் எப்படி மென்மையாக இருக்கின்றனவோ அப்படியே ங் ஞ், ண், ந், ம், ன் – என்ற எழுத்துகளும் மெல்லிய ஓசை உடையவை. எனவே இவற்றுக்கு மெல்லினம் என்று பெயரிடுவோம்.

## இடையினம்




மான்கள் யானையைப் போன்று வலிமையாகவும் இல்லை, முயலைப் போன்று மென்மையாகவும் இல்லை, இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன.

அது போல ய், ர், ல், வ், ழ், ள் – என்ற எழுத்துகளும், வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையதால் இவற்றுக்கு இடையினம் என்று பெயரிடுவோம்.



ஃ என்பது ஆய்த எழுத்து அல்லது தனிநிலை எனப்படும்.

எழுத்துகளின் பெயர்கள் இனிமையாக இருக்கின்றன அப்படித்தானே.

உங்கள் பெயரிலும் உங்கள் நண்பர்களின் பெயர்களிலும் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்துக்களை வட்டமிட்டுக் காட்டுக

# 4 கல்யாணமாம் கல்யாணம்!

3M5MCG

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர்கொர் குரங்கு பின்பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்





தாலிகட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையக் காணோமாம்
சந்தடி புந்தடி செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்தாராம்
வாங்கிவச்சப் பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாராம்



பார்த்துவிட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டாராம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என் பெண்ணை
திருமணம் செய்ய முடியாது
வேண்டாம் இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாரோம்

– நாட்டுப்புறப் பாடல்




## வாங்க பேசலாம்

- இப்பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க.
- உனது பகுதியில் வழங்கும் உனக்குப் பிடித்த நாட்டுப்புறப் பாடல்களை அறிந்து வகுப்பறையில் பாடுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

**பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**



கல்யாணமாம் ______________

______________ ______________

______________ ______________

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. பூலோகமெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................
   (அ) பூலோக + மெல்லாம் (ஆ) பூலோகம் + மெல்லாம்
   (இ) பூலோகம் + எல்லாம் (ஈ) பூலோக + எல்லாம்

2. கல்யாணத்தில் நாட்டியமாடுபவர் ........................................
   (அ) பூனை (ஆ) ஒட்டகச்சிவிங்கி
   (இ) யானை (ஈ) குரங்கு


3. பாலை + எல்லாம் இதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .........................
   (அ) பாலையெல்லாம் (ஆ) பாலைஎல்லாம்
   (இ) பாலைல்லாம் (ஈ) பாலெல்லாம்

## இணைந்து செய்வோம்

கோப்பைகளை அவற்றின் சரியான தட்டுகளோடு பொருத்துக:

| | | |
|---|---|---|
| காணோமாம் | ______________ | வருகிறோம் |
| வாங்கி வச்ச | ______________ | பூனையை |
| வாறோம் | ______________ | வாங்கிவைத்த |
| பூனைய | ______________ | காணவில்லையாம் |

### சிந்திக்கலாமா?




இப்பாடலில் வரும் பூனைக்கும் பூனைக்கும் பதிலாக யானைக்கும் பூனைக்கும் கல்யாணம் ஏற்பாடு செய்திருந்தால் எவ்வாறு இருக்கும்?

வகுப்பறையில் பேசுக...



# கலையும் கைவண்ணமும்

## வண்ணமிட்டு மகிழ்க





### செயல் திட்டம்

உமது பகுதியில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகள் இரண்டினை அறிந்து வருக.

# 5 மாணவர்கள் நினைத்தால்...



சிறுமி மேரி மகிழ்வோடு துள்ளிக் குதித்து ஓடிவந்தாள், தனது தோழி மகிழினியைப் பார்க்க... அவளிடம், "இன்று காலை எங்கள் வீட்டுப்பசு கன்று ஈன்றுள்ளது, இனி நான் எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியுடன் விளையாடுவேன்" என்றாள். அதைக்கேட்ட மகிழினி, "என்னையும் விளையாட்டில் சேர்த்துக் கொள்" என்றாள்.

அப்போது மேரியின் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் ஒரே கும்பல்......ஓடிச்சென்று பார்த்தனர் அவர்கள் கண்ட காட்சி கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்வதாக இருந்தது...... கன்றை ஈன்ற பசு தனது கழிவினை வெளியே தள்ள முடியாமல் இறந்துபோயிருந்தது. பாதி வெளிவந்திருந்த கழிவில் நிறைய நெகிழிக் குப்பைகள் காணப்பட்டன. அந்நெகிழியால் தான் இறப்பு ஏற்பட்டதாகக் கால்நடை மருத்துவர் கூறிக் கொண்டிருந்தார்.

H8L15Z

வேதனையுடன் பள்ளிக்குச் சென்றனர் மேரியும் மகிழினியும். சோகமாக அமர்ந்திருந்த இருவரையும் அழைத்துக் காரணம் கேட்டார் வகுப்பு ஆசிரியர். பிறகு, "நெகிழிகளைப் பயன்படுத்துவதால் பல தீமைகள் ஏற்படுகின்றன. மட்காத இந்தக் குப்பைகளால் சாக்கடைகளில் நீர்தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு, ஈ மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகி நோய் பரவுகிறது. நெகிழிக் குப்பைகளை எரிப்பதால் ஓசோன் படலம் பாதிப்படைகிறது. இதனால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக நம்மைத் தாக்குகிறது. இதனால் தோல் நோய்கள் ஏற்படுகின்றன", என்று விளக்கினார். இதுபற்றிப் பேசிக்கொண்டிருப்பதை விட்டு விட்டுச் செயலில் இறங்குவோம் என்றார். பள்ளியின் நலன் காக்கும் பள்ளி மேலாண்மைக் குழுவினைக் கூட்டி, நெகிழி பற்றிய தீமைகளை எடுத்துரைத்தார்.

பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், ஊர்ப் பொதுமக்கள் ஆகியோரைக் கொண்டு நெகிழி விழிப்புணர்வு பேரணி நடத்தத்

தமக்கு அறிமுகமான செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்கு தடையின்றியும் படித்தல், விவரித்தல்




தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி வாசகங்களைக் கூறிக் கொண்டே கிராமத்தின் அனைத்துத் தெருக்களிலும் பேரணியாக வந்தனர்.

இம்மாதிரியான விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்களிடம் கொடுத்து நெகிழியின் தீமைகளை எடுத்துக் கூறினர். மேலும் ஒவ்வொரு மாணவனும் பயன்படுத்தப்பட்ட காகிதங்களைக் கொண்டு பைகள் செய்து வைத்திருந்தனர் . அதனை அவ்வூரின் அனைத்துக் கடைகளிலும் கொடுத்து அந்தப் பைகளைப் பயன்படுத்தச் சொல்லி நெகிழியின் தீமைகளை எடுத்துக் கூறினர். உள்ளூர் மக்களிடம் இனி கடைகளில் பொருட்கள் வாங்கும்போது துணிப்பைகளைக் கொண்டு செல்ல அறிவுறுத்தினர்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்ற ஆன்றோரின் வாக்கிற்கு ஏற்ப இச்சிறு பிள்ளைகளின் முயற்சியால் அந்த ஊர் நெகிழியற்ற ஊராக மாறி வருகிறது ..........



## வாங்க பேசலாம்

- நெகிழியினால் ஏற்படும் தீமைகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
- நெகிழியை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்ற இடங்களாக எவற்றைக் கருதுகிறாய்? அவ்விடங்களில் நெகிழிக்குப் பதிலாக வேறு என்ன பொருள்களைப் பயன்படுத்தலாம் என வகுப்பறையில் கலந்துரையாடுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. முயற்சி இச்சொல்லின் பொருள் ……………………………

(அ) ஆக்கம் (ஆ) இடைவிடாத உழைப்பு

(இ) இயக்கம் (ஈ) பக்கம்

2. ஆன்றோர் இச்சொல்லின் பொருள் ……………………………

(அ) பெற்றோர் (ஆ) உற்றோர்

(இ) சுற்றோர் (ஈ) பெரியோர்

3. வைத்திருந்தனர் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………

(அ) வைத்து + யிருந்தனர் (ஆ) வைத் + இருந்தனர்

(இ) வைத்து + இருந்தனர் (ஈ) வைத் + திருந்தனர்

4. வீதியெங்கும் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………………

(அ) வீதி + எங்கும் (ஆ) வீதி + யெங்கும்

(இ) வீதியெ + ங்கும் (ஈ) வீதி + அங்கும்

5. நெகிழி + அற்ற என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………

(அ) நெகிழிஅற்ற (ஆ) நெகிழியற்ற

(இ) நெகிழ்அற்ற (ஈ) நெகிழ்யற்ற

6. பாதிப்பு + அடைகிறது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………

(அ) பாதிப்அடைகிறது (ஆ) பாதிப்புஅடைகிறது

(இ) பாதிப்படைகிறது (ஈ) பாதிபடைகிறது

71TPJR

## வினாக்களுக்கு விடையளி

1. மேரி இனி யாருடன் விளையாடப் போவதாகக் கூறினாள்?

2. பசு எதனால் இறந்தது?

3. நெகிழியினால் ஏற்படும் தீமைகள் இரண்டினை எழுதுக.

4. நெகிழி விழிப்புணர்வு வாசகம் ஒன்றினை உருவாக்குக.

## பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக

1. நெகிழியற்ற .............................................. உருவாக்குவோம். (உலகை / உளகை)

2. நெகிழியை ஒழிப்போம் .......................................... காப்போம். (மன்வளம் / மண்வளம்)

3. மேரி ..................................... குதித்து ஓடிவந்தாள். (மகிள்வோடு / மகிழ்வோடு)

4. எறும்பு ............................................ கல்லும் தேயும். (ஊரக் / ஊறக்)

5. துணிப்பை என்பது ............................................ (எளிதானது / எலிதானது)



**செயல் திட்டம்**

மட்கும் பொருள்களைக் கொண்டு பைகள், கூடைகள் போன்றவற்றினை உமது பெற்றோர் உதவியுடன் செய்து வருக.

## இணைந்து செய்வோம்

நெகிழிப் பொருள்களுக்கு மாற்றாக எளிதில் மட்கும் பொருள்களாக எவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் என்பதைப் பட்டியலிடுக.

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________

## சொற்களை இனம்கண்டு அதற்குரிய பெட்டிக்குக் கீழே எழுதுக.

கண்ணாடித்துண்டு, நெகிழிப்பை, காகிதத்தாள், சணல்பை, பீங்கான் தட்டு, இலை







மட்கும் குப்பைப் பெட்டி:

1. ____________
2. ____________
3. ____________

மட்காத குப்பைப் பெட்டி:

1. ____________
2. ____________
3. ____________

# ஒருமை, பன்மை அறிவோமா?

7G3NJF

ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.
ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

**ஒருமைச் சொல்லுக்கு உரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்**

பந்து

ஆமை

முயல்

பூனை

பூ

விழா

பசு

வினா



படம்

மரம்

சிங்கம்

காகம்

பல்

கல்

சொல்

புல்

முள்

தாள்

ஆள்

பொருள்


# 6 துணிந்தவர் வெற்றி கொள்வர்




மூன்றாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு அவர்களின் வகுப்பு ஆசிரியர் ஒரு போட்டியை அறிவித்தார். ஓர் அறையின் நடுவில் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அந்த அறையினுள் சென்று பெட்டியினைத் தூக்கி வருபவரே வெற்றியாளர் என்பதே அப்போட்டியாகும்.

அனைத்து மாணவர்களும் ஆவலுடன் பெட்டி வைக்கப்பட்டிருந்த அறையினுள் சென்றனர். அறையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பெட்டி உருவ அளவில் பெரியதாக இருந்தது. அதனைக் கண்டவுடன் மாணவர்கள் பலர் தங்களால் அப்பெட்டியினைத் தூக்க இயலாது எனப் போட்டியிலிருந்து விலகி விட்டனர். மேலும் சிலர் பெட்டிக்கு அருகே சென்று பின்னர் தங்களால் பெட்டியைத் தூக்க இயலவில்லை என்றால் மற்றவர்கள் சிரிப்பார்களே என்று நினைத்துப் போட்டியில் கலந்து கொள்ளாமல் திரும்பிவிட்டனர். கவியரசி என்ற மாணவி மட்டும் முயற்சி செய்து பார்ப்போமே என்று எண்ணி, பெட்டியினை நகர்த்தியபோது பெட்டி எளிதாக நகர்ந்தது. உடனே, அம்மாணவி பெட்டியினை எளிதாகத் தூக்கினாள்.

கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள்/ ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வெளப்படுத்துதல்



பிற மாணவர்கள் அனைவரும் இதனை வியப்புடன் பார்த்தனர். பின்னர் தயக்கம் விலகி அனைவரும் ஓடிச்சென்று தாங்களும் பெட்டியினை தூக்கிப் பார்த்தனர். பெட்டி தூக்குவதற்குச் சுலபமாக இருந்தது. மாணவ, மாணவிகள் ஆசிரியரிடம் சென்று பெட்டி பெரியதாக இருந்ததால் நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றனர். அதற்கு ஆசிரியர் அது காகிதத்தால் செய்த பெட்டி என்று மாணவர்களிடம் விளக்கினார். மேலும் ஒரு செயலில் இறங்குவதற்குமுன் சிந்திக்க வேண்டும், ஆனால் முயற்சி செய்யாமல் இருக்கக் கூடாது. நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும் என அறிவுறுத்தினார்.

நீங்கள் எல்லாரும் தயக்கம் காட்டியதால் வெற்றி பெறவில்லை. தன்னால் முடியும் என்று நம்பி கவியரசி முயன்றதால் வெற்றி பெற்றாள். எனவே அன்புக் குழந்தைகளே,

"தோல்வியின் அடையாளம் தயக்கம்
வெற்றியின் அடையாளம் முயற்சி
துணிந்தவர் தோற்பதில்லை
தயங்கியவர் வென்றதில்லை"



நாம் விதைக்கும் விதைகளில் முயற்சியுடன் மண்ணைப் பிளந்து கொண்டு வருபவையே செடிகளாகின்றன. தயங்கி நிற்பவை தங்கி விடுகின்றன. அதுபோல கவியரசி தயங்காமல் துணிச்சலாகச் செயல்பட்டதால் வெற்றி பெற்றாள் எனக் ஆசிரியை கூறினார். கவியரசிக்குப் பாராட்டுகளையும் பரிசுகளையும் வழங்கினார். கவியரசியும் மகிழ்ச்சியடைந்தாள்.

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்."

## வாங்க பேசலாம்

- போட்டி நடந்த இந்த வகுப்பறையில் நீ இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?
- பளு தூக்குதல் போன்ற கடினமான வேலைகளை ஆண் பெண் இருவராலும் செய்ய முடியுமா? உனது கருத்து என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக